
Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:

1. 1. பெற்றோர் உயிரி இரு சமப்பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு பகுதியும் ஒரு சேய் உயிரியாக மாற்றமடைகிறது.
   2. எளிய ஒழுங்கற்ற இருசமப் பிளவு முறை அமீபா போன்ற ஒழுங்கற்ற வடிவமுடைய உயிரிகளில் நடைபெறுகின்றது.
   3. கிடைமட்ட இருசமப் பிளவு முறையில் பிளவுமட்டம் உயிரியின் கிடைமட்ட அச்சில் ஏற்படுகின்றது.
   (எ.கா) பாரமீசியம்
   4. உயிரியின் நீள் அச்சில் பிரிவடைவது, நீள்மட்ட இருசமப் பிளவு முறை எனப்படும்.
   (எ.கா) யூக்ளினா
   5. சில உயிரிகளில் பிளவுமட்டம் சாய்வாக இருக்கும் அவை சாய்வுமட்ட இருசமப் பிளவு முறையாகும்.
   (எ.கா) செராட்டியம்



2. இரண்டு ஒற்றை மய இனச்செல்கள் இணைவதே ஒருங்கிணைவாகும்
   ஒருங்கிணைவு முறையின் பல்வேறு வகைகள்:
   i) தன் கருவுறுதல்:-
   ஒரு செல்லிலிருந்தோ அல்லது ஒரே உயிரியிலிருந்தோ உருவாகின்ற ஆண் மற்றும் பெண் இனச்செல்கள் இணைந்து கரு முட்டையை உருவாக்குகின்றன.
   2. எ.கா: ஆக்டினோஸ்பேரியம் மற்றும் பாரமீசியம்.
   ii) அயல் கருவுறுதல்:
   1.ஆண் மற்றும் பெண் என்னும் இரு தனித்தனி பெற்றோர்களிலிருந்து உருவாகின்ற ஆண் மற்றும் பெண் இனச்செல்கள் ஒன்றிணைந்து கருமுட்டை உருவாகிறது.
   2. **எ.கா:** மனிதன்.
   iii) முழு சேர்க்கை:
   1. கீழ் நிலை உயிரிகளில் சில சமயங்களில் முதிர்ந்த உயிரிகள் இனச்செல்களை உருவாக்காமல், அவ்வுயிரிகளே இனச்செல்கள் போன்று செயல்பட்டு ஒன்றிணைந்து புதிய உயிரிகளைத் தோற்றுவிக்கின்றன.
   2. **எ.கா:** டிரைக்கோநிஃம்பா.
   iv) இளம் சேர்க்கை:
   முதிர்ந்த பெற்றோர் செல்லிலிருந்து மறைமுகப்பிரிவு மூலம் உருவாகும் இரு இளம் சேய் செல்கள் இனச்செல்கள் போன்று செயல்பட்டு ஒன்றிணைந்து புதிய உயிரிகளைத் தோற்றுவிக்கின்றன.
   v) மாறுபட்ட செல் சேர்க்கை:
   அமைப்பில் மாறுபட்ட இரு சிறிய இனச்செல்கள் ஒன்றிணையும் முறை புதிய மாறுபட்ட செல் சேர்க்கை எனப்படும்.
   vi) ஒத்த செல் சேர்க்கை:
   1. அமைப்பிலும் செயலிலும் ஒரே மாதிரியான இரு இனச்செல்கள் ஒன்றிணைதல் ஒத்த செல் சேர்க்கை எனப்படும்.
   2. எ.கா: மோனோசிஸ்டிஸ்.
   vii) வேறுபட்ட செல் சேர்க்கை:
   முற்றிலும் வேறுபட்ட இரு இனச்செல்கள் ஒன்றிணையும் முறை வேறுபட்ட செல் சேர்க்கை எனப்படும்.

III.ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:

3. (i) அமீபா ஒரு செல் உயிரியாகும். இவை அழிவற்றவை எனப்படும்.
   (ii) ஒரு முதிர்ந்த அமீபா மைட்டாசிஸ் மூலம் இரண்டு இளம் அமீபாகவே உருவாகிறது.
4. (i) பாலிலா இனப்பெருக்க முறையில் உருவாக்கப்படும் சேய்கள் பெற்றோர்களின் பண்புகளையே கொண்டிருக்கும்.
   (ii) இதையே பிரதி எனவும் சொல்லலாம்.
   (iii) பிரதி என்பது பெற்றோரின் சாயலை கொண்ட சேய்களாகும்.
5. உயிரிகள் தங்கள் வாழ்க்கை சுழற்சியில் மூன்று நிலைகளைக் கொண்டுள்ளன.
   (i) இளம் உயிரி நிலை

(ii) இனப்பெருக்க நிலை
(iii) முதுமை நிலை

(i) இளம் உயிரி நிலை:

1. இது மேலும் வளராக்க நிலை என அழைக்கப்படுகிறது.
2. ஒரு உயிரியின் பிறப்பிற்கும் இனப்பெருக்க முதிர்ச்சிக்கும் இடைப்பட்ட வளர்ச்சிக்காலம் இளம் உயிரி நிலை எனப்படும்.

(ii) இனப்பெருக்க நிலை:

1. இது மேலும் முதிர்ச்சி நிலை என அழைக்கப்படுகிறது.
2. ஒரு உயிரியானது இனப்பெருக்கம் செய்து வழித் தோன்றல்களை உருவாக்கும் செயல்களைச் செய்யும் காலம் இனப்பெருக்க நிலை எனப்படும்.

(iii) முதுமை நிலை:

இனப்பெருக்க நிலை முடியும் காலத்தில் ஒரு உயிரியின் உடல் அமைப்பிலும் செயல்பாடுகளிலும் சிதைவு ஏற்படத் தொடங்கும் நிலை முதுமை நிலை எனப்படும்.

II. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடை யளி:

6. (i) முட்டையானது கருவுறாமல் ஒரு உயிராக வளர்வது கன்னி இனப்பெருக்கம் எனப்படும்.
   (ii) (எ.கா) ரோட்டிபர், தேனீக்கள், மற்றும் வான்கோழி.
7. (i) பாலிலா இனப்பெருக்கத்தை விட பாலினப் பெருக்கமே மேம்பட்டது.
   (ii) பாலிலா இனப்பெருக்கத்தில் வேறுபாடுகள் இருக்காது.
   (iii) பாலினப் பெருக்கத்தில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.
8. (i) பல உட்கருக்களைக் கொண்ட பெற்றோர் உயிரியின் உட்கருக்கள் பிரிந்து பல உட்கருக்களைக் கொண்ட சேய் உயிரிகளை உருவாக்குதல் பிளாஸ்மோடோமி எனப்படும். (ii) பின்னர் உட்கருக்கள் பிளந்து இயல்பான எண்ணிக்கையை நிலைப்படுத்துகின்றன.
   (iii) எ.கா: ஒபாலினா மற்றும் பிலோமிக்ஸா.

I. சரியான விடையை தேர்வு செய்க:

9. (a) அர்ரீனோடோக்கி
10. (c) இணைதல்
11. (d) தேனீக்கள்
12. (d) 'ஆ' மற்றும் 'இ'
13. (d) மனிதன் மற்றும் பன்றி

QB 365 Study Material
QUESTION BANK 365